DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE/
SUBORDINATE JUDGE, MANAMADURAI

| | |
|---|---|
| Case No. | S.C.No. 4/2023 |
| Police Station | Salaigramam PS |
| Deposition of Witness for | LW.2 /PW.1 |
| Name | கணேசன் |
| Father's/Husband's Name | பெரியசாமி |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

**Accused Absent. 317 crpc petition filed and allowed.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 19.09.2025 at **11**.55 a.m

**முதல் விசாரணை:**

எதிரி ராமநாதனை எனக்கு தெரியும். நான் வீரன்திடலில் வசித்து வருகிறேன். நான் உதயனூர் குரூப்பில் கிராம உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். கூடுதல் பொறுப்பாக விசவனூர் குரூப்பும் சேர்த்து பார்த்து வருகிறேன். 20.11.2020 அன்று காலை 8 மணியளவில் அரசு புறம்போக்கு இடமான ஆர்.எஸ். மங்களம் கால்வாயில் சீமைக்கருவேல மரங்களை வெட்டிஇருந்தார்கள். எங்களுக்கு தகவல் கிடைத்ததால் நானும் கிராம நிர்வாக அலுவலரும் நேரடியாக சென்ற தடுத்துவிட்டோம். பின்பு சாலைக்கிராமம் காவல் நிலையத்திற்கு நானும் கிராம நிர்வாக அலுவலரும் சென்று புகார் கொடுத்தோம் போலீசார் அதற்கு ரசீது வழங்கினார்கள். 03.12.2020 அன்று காவல் ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார். அதில் நானும் கிராம நிர்வாக அலுவலரும் கையொப்பம் செய்தோம். காவல் ஆய்வாளர் இது சம்மந்தமாக என்னை விசாரித்தார். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான் அது அ.சா.ஆ.1.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

விறகை வெட்டிக்கொண்டிருப்பதாக யார் எங்களுக்கு தகவல் கூறினார்கள் என்றால் ஞாபகம் இல்லை. 20.11.2020 அன்று காலை 8 மணிக்கு நானும் கிராம நிர்வாக அலுவலரும் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தோம். 20.11.2020 அன்றே காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். நாங்கள் கொடுத்த புகாருக்கு 02.12.2020 அன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. சம்பவ இடத்தை ஆய்வாளர் 03.12.2020 அன்று பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார். நான் கையொப்பம் செய்த பார்வை மகஜரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் கிராம நிர்வாக அலுவலர் கணேஷ் பிச்சை கையொப்பம் மட்டும் உள்ளது எனது கையொப்பம் இல்லை என்றால் சரிதான். என்னை காவல் ஆய்வாளர் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்து கையொப்பம் பெற்றார். நான் சொன்னது பொல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் நடக்காத சம்பவத்திற்கு போலீசார் கேட்டுக்கொண்டதன்பேரில் கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த பொய் புகாரின் பேரில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

உதவி அமர்வு நீதிபதி

மானாமதுரை

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE/
SUBORDINATE JUDGE, MANAMADURAI

| | |
|---|---|
| Case No. | S.C.No. 4/2023 |
| Police Station | Salaigramam PS |
| Deposition of Witness for | LW.3 /PW.2 |
| Name | சீனிவாசன் |
| Father's Name | காமாட்சிராஜு |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

**Accused Absent. 317 crpc Petition filed and allowed.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 19.09.2025 at **12**.15 p.m

**முதல் விசாரணை:**

நான் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். 25.11.2020 அன்று நான்சாலைக்கிராமம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த போது விசவனூர் குரூப் கிராம நிர்வாக அலுவலர் கணேஷ்பிச்சை என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலைய மனு ரசீது எண் 220/2020 வழங்கினேன். அதன்பின்னர் அந்த மனுவை பார்வையிட்டு மனுவை விசாரணை செய்து புகாரின் தன்மைக்கேற்ப 02.12.2020 அன்று சாலைக்கிராமம் காவல் நிலைய குற்ற எண் 127/2020 பிரிவுகள் 147, 447, 379 இதச மற்றும் 3 of TNPPDL Act படி வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை மற்றும் வழக்கின் கோப்புகளை காவல் ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். புகார் மனு அ.சா.ஆ.2, முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-**

25.11.2020 அன்று கிராம நிர்வாக அலுவலர் நேரடியாக காவல் நிலையம் வந்து என்னிடம் புகார் மனு கொடுத்தார். அந்த புகாரில் என்ன எழுதியிருந்தது நான் காவல் ஆய்வாளரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் புகார் மனு இணைக்கப்பட்டதால் நான் சொல்லவில்லை. 25.11.2020 அன்று புகார் கொடுத்ததன் அடிப்படையில் நான் மனு ரசீது வழங்கினேன். எப்போது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் 02.12.2020 அன்று பதிவு செய்தேன். காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதற்கு விளக்கம் கூறியுள்ளேனா என்றால் கூறவில்லை. புகார் மனுவில் என்ன எழுதப்பட்டிருந்தது என்றால் அரசுக்கு சொந்தமான மதிப்புமிக்க கருவேல மரங்களை ராமநாதன் மற்றும் இருபது நபர்கள் வெட்டி இரண்டு வண்டிகளில் ஏற்றிச்சென்ற போது அதனை கிராம நிர்வாக அலுவலர் தடுத்து நிறுத்தியதாகவும் அதன்பின்பு காவல் நிலையம் வந்து புகார் கொடுத்ததாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த இருபது நபர்களும் யார் என்று தெரிந்து கொண்டேனா என்றால் அது ஆய்வாளருக்குத் தான் தெரியும். அ.சா.ஆ.2 புகார் மனுவில் இரண்டு வண்டி பாரம் வெட்டி ஏற்றி உள்ளனர் என்று இடைச்செறுகலாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரை கொடுத்த உடன் இந்த எதிரி தான் கருவேல மரங்களை வெட்டினார் என்று நான் விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் நான் தெரிந்து கொள்ளவில்லை புலன் விசாரணை அதிகாரிக்கு தான் தெரியும். எதிரி சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றும் காவல் நிலையத்தில் கிராம நிர்வாக அலுவலர் எதிரி மீது தவறாக கொடுத்த புகாரை ஏற்று சரியாக விசாரணை செய்யாமல் தவறாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமனறத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

உதவி அமர்வு நீதிபதி

மானாமதுரை